Puducherry

Regional Bulletin Tamil

வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 14-09-2026 – திங்கள்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள் :

- மகளிர் ஆசிய கோப்பை சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணிக்கு, குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

- நாட்டில் பல்வேறு மொழிகள் இருப்பது மிகப் பெரிய வலிமை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- பிரிக்ஸ் உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதன் மூலம், பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

- நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மகளிர் கிரிக்கெட் – வாழ்த்து (9)

மகளிர் ஆசிய கோப்பை சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணிக்கு, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இது குறித்து பிரதமர்

வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்த வெற்றி நாடு முழுவதும் உள்ள லட்சக்கணக்கான இளைஞர்களை மேலும் ஊக்கப்படுத்தும் என பதிவிட்டுள்ளார். முன்னதாக, துபாயில் நடைபெற்ற மகளிர் ஆசிய கோப்பை 2026 கிரிக்கெட் போட்டியின், இறுதி ஆட்டத்தில், இலங்கை அணியை, 72 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி கோப்பையை கைப்பற்றி உள்ளது.

அமித் ஷா -1 (7)

நாட்டில் பல்வேறு மொழிகள் இருப்பது மிகப் பெரிய வலிமை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். இந்தி மொழி தினம் இன்று கொண்டாடப் படுவதையொட்டி, அவர் நவி மும்பையில் தொடங்கிய 2 நாள் , இந்தி திவஸ் 2026 சம்மேளனத்தை தொடக்கி வைத்துப் பேசுகையில் இந்தி மொழி பிற மொழிகளுக்கு போட்டியான மொழியல்ல என்றும், தேசிய ஒற்றுமையின் முக்கியமான இணைப்புச் சங்கிலி என்றும் குறிப்பிட்டார். இது குறித்த கூடுதல் தகவல்...

(வாய்ஸ்)

அமித் ஷா - 2 (11)

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், அனைத்து மொழிகளும், தொழில்நுட்ப வளர்ச்சியின் பொற்காலத்தை கண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, சுட்டிக் காட்டினார். தற்போதைய சூழலில் செயற்கை நுண்ணறிவு கருவிகள், இந்திய மொழிகளுக்கு இடையிலான எளிதான மொழிபெயர்ப்புக்கான வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறிய அவர், புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். நம் நாட்டின் கலாச்சாரம், யோகா, ஆயுர்வேதம் போன்றவை மொழி வாயிலாகவே உலகை சென்றடைந்துள்ளதாகக் கூறினார். வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய பயணத்தில், மொழியை ஒரு சிறந்த கருவியாக மாற்ற மக்கள் உறுதியேற்க வேண்டும் என, திரு. அமித் ஷா வலியுறுத்தி உள்ளார்.

பிரிக்ஸ் மாநாடு (12)

புதுடெல்லியில் நடைபெற்ற 18ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்தது. சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும், தேசிய பாதுகாப்பிற்கும், எரிசக்தி பாதுகாப்பு மிக முக்கியமானது என்று, உறுப்பு நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் வலியுறுத்தினர். மாநாட்டின் முடிவில், புதுடெல்லி பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேற்காசியாவில் பொதுமக்கள், மற்றும் உள்கட்டமைப்புகள் பாதுகாக்க வேண்டும் என்றும், அமைதி பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்க வேண்டும் என்றும் பிரிக்ஸ் தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். மேலும், பயங்கரவாதத்திற்கு எதிராக, பூஜ்ஜிய சகிப்புத் தன்மைக் கொள்கையை உறுப்பு நாடுகள் மீண்டும் உறுதி செய்துள்ளன. உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார கூட்டமைப்பில் இந்த உச்சிமாநாடு மிக முக்கியமானதாக கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.

ராஜ்நாத் சிங் (11)

பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாட்டை, இந்தியா நடத்தியதன் மூலம், மீள்திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை உலக நாடுகளிடையே முன்னிறுத்தியதாக, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். வரலாற்றுச் சிறப்புமிக்க பிரிக்ஸ் உச்சி மாநாடு புதுடெல்லியில் வெற்றிகரமாக நிறைவடைந்ததையொட்டி, அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பிரிக்ஸ் ஒத்துழைப்பை சாமானிய மக்களுடன் நேரடியாக இணைப்பதில், இந்தியா சிறப்பு கவனம் செலுத்தி உள்ளதை குறிப்பிட்டுள்ளார். அனைவரையும் உள்ளடக்கிய மனிதநேயத்தை மையமாகக் கொண்ட இந்த அணுகுமுறை, இந்த மாநாட்டின் தனி சிறப்பாக அமைந்தது என, திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

எல் முருகன் (12)

பிரிக்ஸ் உச்சி மாநாட்டை புதுடெல்லியில் வெற்றிகரமாக நடத்தியதன் மூலம், பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார் என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை

இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார். இம்மாநாட்டின் போது ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினுக்கு திருக்குறளின் ரஷ்ய மொழிபெயர்ப்பு புத்தகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்கியதற்கு, டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துள்ளார். சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழர்களது அடையாளங்களை உலகளவில் பிரதமர் எடுத்துச் சென்றதையும் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில், தமிழகத்தில் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய தொகுதிகளில் நடைபெறவுள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில், அஇஅதிமுக-வை ஆதரிக்க, பிஜேபி முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

செமிகான் இந்தியா (10)

செமிகான் இந்தியா – 2026-ன் 5ஆவது கண்காட்சியை புதுடெல்லி யஷோ பூமியில், வரும் 16ஆம் தேதி பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார். இதில் 600க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள், 300க்கும் மேற்பட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் 40க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இந்த கண்காட்சியில், 6 நாடுகளின் அரங்குகள், 12 மாநில அரசின் அரங்குகள் மற்றும் பிரத்யேக ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கான அரங்குகளும் இடம் பெறும். இந்த கண்காட்சியின் மூலம் இந்தியா மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டாண்மைகள், முதலீட்டு வாய்ப்புகள், தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் மற்றும் விநியோக சங்கிலி இணைப்புகள் குறித்து ஆராயப்படும்.

விநாயகர் சதுர்த்தி -1 (5)

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. மக்கள் தங்களது இல்லங்களில் களிமண்ணால் ஆன விநாயகர் சிலைகளை வைத்து, கொழுக்கட்டை, பழங்கள் உள்ளிட்டவைகளை படைத்து கொண்டாடினர். புதுச்சேரியிலும் விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இது குறத்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

விநாயகர் சதுர்த்தி -2 (15)

(வாய்ஸ்)

புதுச்சேரியில் மிகவும் பிரசித்திப் பெற்ற மணக்குள விநாயகர் கோவிலில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, அதிகாலை 4 மணி முதலே கோயில் நடை திறக்கப்பட்டு, மூலவருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடத்தப்பட்டு, தங்கக் கவசம் அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து உற்சவர்க்கு பால், தயிர், இளநீர் உள்ளிட்ட 21 வாசனை திரவியங்கள் மூலம் அபிஷேகம் நடைபெற்றது. கற்பக விருட்சம் அலங்காரத்தில் எழுந்தருளிய அவருக்கு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பக்தர்கள் அனைவரும் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். இவ்விழாவை முன்னிட்டு அனைவருக்கும் லட்டு பிரசாதங்கள் வழங்கப்பட்டன. புதுச்சேரி மட்டுமல்லாது, அண்டை மாநிலமான தமிழகப் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கோவிலில் குவிந்ததால், காவல்துறையினர் சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, புதுச்சேரி 45 அடி சாலையில் உள்ள தனியார் இனிப்பகம் சார்பில் 121 கிலோ மெஹா லட்டு செய்யப்பட்டு, விநாயகருக்கு படைக்கப்பட்டதை ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

பூபேந்தர் யாதவ் (11)

மத்திய சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ், மிஷ்டி திட்டத்தின் கீழ், குஜராத் மாநிலம் கட்ச் பகுதியில், 27 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில், சதுப்புநில நடவுகளை நிறைவு செய்ததன் மூலம், ஒரு புதிய சுற்றுச்சூழல் மைல் கல்லை எட்டியுள்ளதாக, பெருமிதம் தெரிவித்துள்ளார். கட்ச் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர், வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் சிறுத்தை திட்டத்தின் ஒரு பகுதியாக, வனத்துறைக்கு 33 ரோந்து மற்றும் மீட்பு வாகனங்களை கொடியசைத்து தொடக்கி வைத்தார். தாயின் பெயரில் மரம் நடும் திட்டத்தின் கீழ், ஒரு ஹெக்டேரில் 49 வகையிலான 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தாவரங்கள், தேனீ வளர்ப்பு அமைப்புகளைக் கொண்ட மையத்தையும், திரு. பூபேந்தர் யாதவ் தொடக்கி வைத்தார்.

## சென்டாக் (8)

புதுச்சேரியில் சென்டாக் மூலம் MBBS, BDS, ஆயுர்வேதம், கால்நடை மருத்துவம் உள்ளிட்ட மருத்துவ படிப்புகளுக்கு 2ஆம் கட்ட கலந்தாய்வு நடைபெற்றதை அடுத்து, இட ஒதுக்கீடு ஆணையை நாளை முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் 18ஆம் தேதி மாலை 5 மணிக்குள் ஒதுக்கப்பட்ட கல்லூரிகளில் மாணவர்கள் அசல் சான்றிதழ்களை சமர்ப்பித்து, உரிய கட்டணங்களை செலுத்தி சேர வேண்டும் என, சென்டாக் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வானிலை (8)

தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகள் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால், தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 18ஆம் தேதி வரை, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## கிரிக்கெட் (3)

இந்தியா – ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது. 3 போட்டிகள் கொண்ட இத்தொடரில், இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

## ரேகா குப்தா (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொது சேவையை குறிக்கும் வகையில், சேவா சங்கல்ப் அபியான் என்னும் இயக்கம், இம்மாதம் 17ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 17ஆம் தேதி

வரை முடிவடையும். இந்த இயக்கத்தின் கீழ், டெல்லி அரசு 13 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடக்கி வைத்து, அடிக்கல் நாட்ட உள்ளதாக, முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா தெரிவித்துள்ளார். இந்த இயக்கத்தின் பலன்கள் மக்களை நேரடியாக சென்றடையும் வகையில், 70 சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்படும் என அவர் கூறியுள்ளார்.

நேபாளம் (8)

பெரும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்கு இந்தாண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை, நாளொன்றுக்கு 18 மணி நேரம் மின்சாரத்தை ஏற்றுமதி செய்ய, மத்திய மின்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. 600 மெகாவாட் வரை, ஏற்றுமதி செய்யவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தின் மின் தேவைகளை பூர்த்தி செய்ய இந்த ஒப்புதல் உதவும் என்றும், இந்தியாவிற்கும் – நேபாளத்திற்கும் இடையிலான நெருக்கமான மற்றும் நீண்டகால எரிசக்தி ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**மீண்டும் தலைப்புச் செய்திகள் :**

- மகளிர் ஆசிய கோப்பை சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணிக்கு, குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.
- நாட்டில் பல்வேறு மொழிகள் இருப்பது மிகப் பெரிய வலிமை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- பிரிக்ஸ் உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதன் மூலம், பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.
- நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.